DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.135 /2022**

**prosecution witness: Pw 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்து நம்பு | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**24.03.2023**

முதல் விசாரணை:

1. நான் இராமேஸ்வரம் பேக்கரும்பில் வசித்து வருகிறேன். மளிகை கடை நடத்தி வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும்.எனது தம்பி பெயர் அசோக நம்பு, பால் வியாபாரம் செய்து வருகிறார்.கடந்த 13.01.2022-ம் தேதி காலை 06.30 மணிக்கு வீட்டில் இருந்து பாம்பனை நோக்கி இராமேஸ்வரம் to மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்றார். அப்போது தங்கச்சிமடத்தில் இருந்து ஓம்னி வண்டி வந்து என் தம்பி மீது மோதி விபத்து ஏற்படுத்தி சம்பவ இடத்திலேயே கை, கால் எல்லாம் நொறுங்கிவிட்டது.

2. அதன்பின்பு 108 ஆம்புலன்சில் ஏற்றி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பார்க்கமுடியாது என்று சொன்னதால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதோடு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக போன் மூலம் தகவல் சொன்னார்கள். அதன்பின்பு தங்கச்சிமடம் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. அதில் உள்ள கையெப்பம் என்னுடையது- அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. விபத்து நடந்ததாக போன் மூலம் தகவல் வந்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். பேக்கரும்பில் வீட்டில் இருக்கும் போது தான் போன் வந்தது. பாலு என்ற பையன் போன் பன்னி சொன்னார். பாலு எனது உறவினர்.எங்கள் ஊர்காரர். நான் சம்பவ இடத்திற்கு போகும் போது போலீஸ் இருந்தார்கள். இரண்டு பேர் இருந்தார்கள். தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் உள்ளவர்கள். 108 க்கு யார் தகவல் சொன்னது என்றால் என்னுடன் வந்த வேலாங்கண்ணன், கருணாகரன் ஆகியோர் தகவல் சொன்னார்கள். ஆம்புலன்சு ஒரு 15 நிமிடத்தில் வந்துவிட்டது- நான் சம்பவ இடத்திற்கு போகும் போது காலை 06.45 மணி இருக்கும்.

2.ஆம்புலன்சில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு உடன் யார் சென்றார்கள் என்றால் கருணாகரன், வேலாங்கண்ணன் சென்றார்கள். நானும் மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். அதன்பின்பு நான் அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு தங்கச்சிமடம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார் மனுவை நான் சொல்ல சொல்ல ரைட்டர் தான் எழுதினார். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். கையெழுத்தில் தேதி மட்டும் போட்டேன் நேரம் போடவில்லை. வேறு எதாவது பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை.

3. புகார் கொடுக்கும் போது என்னுடன் பழனி என்ற ஒரு பையனும், தங்கச்சிமடத்தை சேர்ந்த ஜேசு மைக்கேல் என்பவரும் வந்தார்கள். வண்டியை ஓட்டி வந்தவரின் பேர் விபரம், எப்படி தெரியும் என்றால் கருணாகரன் என்பவரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேனா என்றால் பெயர் தான் தெரியும் எதிரியை நான் பார்த்தது இல்லை. இறந்து போனவர் என் உடன் பிறந்த தம்பி ஆவார். புகாரினை எனது தம்பி இறந்த தகவல் கிடைத்த பின்பு நான் நான் கொடுத்தேன்.

4. புகாரில் எனது தம்பி எத்தனை மணிக்கு இறந்தார் என்று சொல்லியுள்ளேன். போலீசார் என்னை புகார் மனு கொடுக்கும் போது விசாரித்தார்கள் அதன்பின்பு விசாரிக்கவில்லை. எனக்கு விபத்து நடந்த விசயம் எதுவும் தெரியாது விபத்தில் இறந்தவர் எனது தம்பி என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனுவை போலீசார் எழுதி கொடுத்து அதில் நான் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் விபரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் என்பதால் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.